
# <u>பத்திரிகை வெளியீடு</u>

## காப்புறுதி கைத்தொழில் செயலாற்றுகை – 2014 ஆம் ஆண்டின் 1வது அரையாண்டு

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டுப்பணம்**

காப்புறுதிக் கைத்தொழில் 2014 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் தனது வளர்ச்சியை தொடர்ந்தது. 2013 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டுடன் ஒப்பிடும் போது ஒட்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டுப்பணம் (GWP) 3.07% இனால் வளர்ச்சி அடைந்ததுடன் மொத்தச் சொத்துக்கள் 13.0% இனால் அதிகரித்தது.


2013 இன் முதல் அறு மாதங்களின் ரூபா 47,749 மில்லியனுடன் ஒப்பிடும்போது, நீண்டகால காப்புறுதி மற்றும் பொது காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 2014 ஜூன் 30 வரையிலான ஆறு மாதங்களுக்கு (06) ரூபா 49,216 மில்லியனாக இருந்தது. இது 3.07% வளர்ச்சியை பிரதிபலித்தது. 2014 இன் 1வது அரையாண்டின் போது, பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் தொகை ரூபா 28,761 மில்லியனாக இருந்தது. 2013 இன் 1வது அரையாண்டில் ரூபா 28,189 மில்) அதே நேரம் நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் தொகை ரூபா 20,455 மில்லியனாக இருந்தது. (2013 இன் 1வது அரையாண்டு: ரூபா 19,561 மில்லியன்) ஆகவே 2013 ஆம் ஆண்டின் அதற்கு இணைவான காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது, பொது காப்புறுதி வர்த்தகத்தினதும், நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தினதும் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி முறையே 2.03% மாகவும் 4.57% மாகவும் காணப்பட்டது.




**மொத்தச் சொத்துக்கள்**

2014 ஜூன் மாதம் 30 ஆம் திகதியன்று பதிவு செய்யப்பட்ட இது 13.0% வளர்ச்சியை காண்பித்தது. ரூபா 390,918 மில்லியன்னுடன் ஒப்பிடும் போது காப்புறுதி கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 2013 ஜூன் மாதம் 30 ஆம்

திகதியில் ரூபா 345,942 மில்லியனாக அதிகரித்துள்ளன. நீண்ட காலக் காப்புறுதித் தொழிலின் சொத்துக்கள் ரூபா 237,706 மில்லியனாக இருந்தது. (2013 ஆம் ஆண்டின் 1வது அரையாண்டு: ரூபா 210,475 மில்லியன் ஆக இருந்த அதேவேளையில் பொதுக் காப்புறுதி தொழிலின் சொத்துக்கள் ரூபா 153,212 மில்லியன் ஆகவிருந்தது. (2013 ஆம் ஆண்டின் 1வது அரையாண்டு ரூபா 135,467 மில்லியன்). இது 2014 ஆம் ஆண்டின் முதலாவது 6 மாத காலப்பகுதியின் முடிவில் முறையே 2.94% யையும் 13.10% யையும் கொண்ட வளர்ச்சி வீதத்தை காண்பித்தது.




**அரசாங்க பிணையங்களின் முதலீடு**

2014 ஆம் ஆண்டின் முதலாவது ஆறு மாத காலத்தின் முடிவில் அரசாங்க பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடு ரூபா 106,192 மில்லியன் ஆக இருந்தது. இது நீண்ட கால காப்புறுதித் தொழிலின் மொத்தச் சொத்துக்களின் 44.67% வீதமாக இருக்கின்றது. (2013 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டு: 97,331 ரூபா: 46.24%.) அதே வேளையில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்களின் அத்தகைய முதலீடானது ரூபா 28,491 மில்லியன் ஆக இருந்ததுடன், 18.60%யை பிரதிநிதித்துவம் செய்தது. (2013 ஆம் ஆண்டின் 1வது அரையாண்டு: ரூபா 26,994, 19.93%). ஆதற்கமைவாக, 2014 ஜூன் 30 அன்றுள்ளவாறு, பொது காப்புறுதி வர்த்தகத்தின் தொழில்நுட்ப ஒதுக்கு மற்றும் ஆயுட் காப்புறுதி வர்த்தகத்தின் நீண்டகால காப்புறுதி நிதியம் இரண்டினதும் சொத்துகளின் மொத்த முதலீடு ரூபா 134,683 மில்லியனாகவும் 34.45%யை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இருந்தது. (2013 இன் 1வது அரையாண்டில் ரூபா 124,326, 35.94%).

**சர்ச்சைக்குரிய தீர்மானங்களும் மற்றும் புலனாய்வுகளும்**

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்பறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதியின் நியதிகளின் பிரகாரம் காப்புறுதிக் கைத்தொழிலானது இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஒழுங்குறுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றது. காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாக்கும் அதன் ஒட்டு மொத்த நோக்கத்திற்காக, கோரிக்கையாளர்களினால் சபைக்கு அனுப்பப்படும் கோரிக்கைகளை தீர்ப்பது தொடர்பாக காப்புறுதி வழங்குனர்களுக்கும் கோரிக்கையாளர்களுக்கும் இடையில் ஏற்படக் கூடிய சர்ச்சைகளை புலனாய்வு செய்வதற்கும் தீர்த்து வைப்பதற்குமான அதிகாரம் சபைக்கு உள்ளது. மேலும் எந்தவொரு காப்புறுதி வழங்குனர், தரகர் அல்லது முகவர்களுக்கு எதிராக அனுப்பப்படும் ஏதாகிலும் முறைபாடுகளையும் சபை

விசாரிக்கும். சபையினால் மீளாய்வு செய்யப்படுவதற்கென அனுப்பப்பட்ட 268 விடயங்களில் காலத்தின் போது 44% மானவை தீர்த்துவைக்கப்பட்டது/முடிவுக்கு வந்தது. தீர்த்து வைக்கப்பட்ட/முடிவுக்கு வந்த விடயங்களில் 95 காப்புறுதி காப்பீடுகளின் கீழ் செய்யப்பட்ட கோரிக்கைகளுடன் தொடர்புடைய சர்ச்சைகளாக இருந்தன. இவற்றில் 13 கோரிக்கைகள் சபையின் தலையீட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**காப்புறுதி வழங்குனர்கள்**

2014 ஜுன் மாதம் 30 ஆம் திகதியில் இருந்தவாறு காப்புறுதிச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட 22 கம்பனிகளில் 12 கம்பனிகள் கூட்டுக் கம்பனிகளாகவும் (பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி தொழில்கள் ஆகிய இரண்டையும் கையாளுகின்றவை.) மற்றும் ஆறு (06) கம்பனிகள் பொதுக் காப்புறுதித் தொழிலை நிறைவேற்றுவதற்காகப் பதிவு செய்யப்பட்டவைகளாகவும் மூன்று (03) கம்பனிகள் நீண்ட கால (ஆயுள்) காப்புறுதி தொழிலை நிறைவேற்றுவதற்கும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2009 ஆகஸ்ட் 5 ஆம் திகதியிலிருந்து வரையறுக்கப்பட்ட செலிங்கோ தக்காபுல் கம்பனியானது காப்புறுதித் தொழிலை நடத்துவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து தனது செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள தீர்மானித்துள்ளதாக ஏஐஜி (AIG) காப்புறுதி லிமிடட் சபைக்கு அறிவித்துள்ளதுடன் தற்போது வெளியேறும் திட்டத்திலும் உள்ளது.

**காப்புறுதி தரகர்கள்**

காப்புறுதி சபையுடன் பதிவு செய்து கொண்டுள்ள 57 காப்புறுதி தரகுக் கம்பனிகள் பிரதானமாக பொதுக் காப்புறுதித் தொழிலில், தீவிரமான ஈடுபாட்டுடன் காப்புறுதி தரகுத் தொழிலில் ஈடுபட்டன. பொதுக் காப்புறுதித் தொழில் மூலமாக பிறப்பிக்கப்படும் தரகு வருமானமானது ரூபா 788 மில்லியன் ஆக இருந்தது. (2013 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு : ரூபா 752 மில்லியன் ஆக இருந்த அதேவேளையில் நீண்ட கால காப்புறுதித் தொழில் மூலமாக பெறப்பட்ட தரகு வருமானத்தின் தொகை ரூபா 08 மில்லியனாகும். (2013 இன் 1வது அரையாண்டு ரூபா 10 மில்) 2013 இன் 1வது அரையாண்டின் ரூபா 762 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2014 இன் 1வது அரையாண்டில், பொது காப்புறுதி தொழில் மற்றும் நீண்டகால காப்புறுதி தொழில் இரண்டிலிருந்தும் கிடைத்த மொத்த தரகு வருமானத்தின் தொகை ரூபா 796 மில்லியனாக இருந்தது. ஆகவே, காப்புறுதி தரகு வியாபாரத்தின் ஊடாக பிறப்பிக்கப்பட்ட மொத்த தரகு வருமானம் 4.46% வளர்ச்சியை கண்டது.

*குறிப்புகள்:*

1) *கணக்காய்வ செய்யப்படாத தரவுகள்*
2) *வேலை நிறுத்தம், கலவரங்கள், சமூக கிளர்ச்சிகள் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு, காப்புறுதி கம்பனிகளின் பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொ.எ.த.க. இற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.*
3) *தேவைப்படும் தகவல்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படாமையினால், மேலேயுள்ள பகுப்பாய்வு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்களை உள்ளடக்காது.*
4) *உள் இணைந்த பிரிவு மீதிகள் அகற்றப்படவில்லை (ஊம்) நீண்டகால காப்புறுதி மற்றும் பொது காப்புறுதி பிரிவகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள்.*


| | |
|---|---|
| தொலைபேசி: 011 2396184 – 9 | தொலை நகல்: 011 2396190 |
| மின் அஞ்சல்: info@ibsl.gov.lk | இணையம்: www.ibsl.gov.lk |

**இலங்கைக் காப்புறுதிச் சபை**

**தளம் 11,**

**கிழக்கு கோபுரம்**

**உலக வர்த்தக நிலையம்**

**கொழும்பு 01**


**05.12.2014**